**MCOP NO:1264/2024 DATE:10.11.2025**

ம.சா :1

பெயர் : திரு. சுகுமார்

த/பெ : திரு. வேணு

வயது : 66

**<u>சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்:</u>**

**<u>2 ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

விபத்து குறித்த புகார் நான் கொடுத்தேன். குற்றவியல் நீதிமன்றத்தில் ஆஜராகி நான் சாட்சியம் அளிக்கவில்லை. குற்ற வழக்கின் நிலை குறித்து எனக்கு தெரியாது. விபத்து நடந்த இடம் தேசீய நெடுஞ்சாலை என்றால் சரிதான். விபத்து சமயத்தில் நான் சாலையை கடந்து கொண்டிருந்தேன் என்றால் சரியல்ல. அந்த இடத்தில் நடைமேடை இல்லை என்பதால், கடப்பதற்காக சாலையின் ஓரத்தில் காத்துக்கொண்டிருந்தேன். விபத்து இரவு 9.30 மணிக்கு ஏற்பட்டது. நான் நின்று கொண்டிருந்த இடத்தல் தான் போக்குவரத்து சிக்னல் உள்ளது. வாகனம் செல்வதற்காக பச்சை சிக்னல் போட்ப்பட்டிருந்ததா என்றால் அதை நான் கவனிக்கவில்லை. பாதசாரிகள் கடப்பதற்கான சிகப்பு சிக்னல் தான் போடப்பட்டிருந்தது. இருசக்கர வாகனமானது தெற்கிலிருந்து வடக்கு நோக்கி வந்து கொண்டிருந்தது. மெப்ஸ் என்ற இடத்தில் உள்ள கேட் அருகே நின்று கொண்டிருந்தேன். நான் சொல்வது போல் இருந்த இடத்தில் இருந்து எதிர் திசையில் செல்வதற்காக பாதசாரிகள் கடப்பதற்கான குறியீடுகள் எதுவும் அந்த இடத்தில் இல்லை என்றால் சரியல்ல. விபத்து குறித்த மாதிரி வரைபடம், குற்றப்பத்திரிக்கை மற்றும் மோட்டார் வாகன ஆய்வறிக்கை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அவைகளை தாக்கல் செய்தால் இந்த விபத்து என்னுடைய கவனக்குறைவால் ஏற்பட்டுள்ளது என்று தெரியவரும் என்பதால் அவைகளை தாக்கல் செய்யாமல் தவிர்த்துள்ளீர்கள் என்றால் சரியல்ல. நான் 108 ஆம்புலன்ஸ் மூலமாக மருத்துவமனைக்கு அழைத்து செல்லபட்டேன். போலீசார் சொல்லி தான் இருசக்கர வாகனத்தின் பதிவு எண்ணை நான் தெரிந்து கொண்டேன். நான் ராஜீவ் காந்தி மருத்துவமனையில் இருந்து மருத்துவரின் ஆலோசனைக்கு எதிராக நானே வெளியே வந்து விட்டேன் என்றால் சரியல்ல. நான் அந்த மருத்துவமனையில் ஒரு நாள் சிகிச்சை பெற்று கொண்டேன். மருத்துவரின் அலோசனைப்படி நான் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றிருந்தால் எனக்கு ஏற்பட்ட காயங்கள்

அனைத்தும் பூரணமாக குணமடைந்திருக்கும் என்றும், அதனால் எனக்கு வருமான இழப்பு ஏற்பட்டிருக்காது என்றும், மருத்துவரின் அலோசனைக்கு எதிராக நான் வந்து விட்டதால் எனக்கு ஏற்பட்ட காயங்களுக்காக 2ம் எதிர்மனுதாரர் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல என்றால் சரியல்ல. அரசு மருத்துவமனையில் எனக்கு எடுக்கப்பட்ட நுன்கதிர் படமோ, ஸ்கேன் ரிப்போர்ட் தாக்கல் செய்யவில்லை. அரசு மருத்துவமனையில் வெளியே வந்த பிறகு நான் அறுவை சிகிச்சை எதுவும் செய்யவில்லை. புத்தூர் கட்டு தான் போட்டுக்கொண்டேன். எனது பிரமாண பத்திரிக்கையில் காட்டப்பட்டுள்ள மருத்துவ செலவுகள் மற்றும் போக்குவரத்து செலவுகள் ஆகியவற்றிற்கு உண்டான ஆவணங்களை நான் தாக்கல் செய்யவில்லை. என்னுடைய தொழில், வருமானம், வருமான ஈட்டும் திறன் மற்றும் வருமான இழப்பை காட்டும் ஆவணத்தை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனக்கு வயது தற்போது எனக்கு 65 என்பதால் நான் வயது மூப்பின் காரணமாக எந்த வேலையும் என்னால் செய்ய முடியாது என்றும், அதனால் நான் வெல்டர் வேலை செய்து வருவதாக எனது மனுவில் இழப்பீடு பெற வேண்டிஎன்ற எண்ணத்துடன் சொல்லி உள்ளேன் என்றால் சரியல்ல. என்னை இடித்த வாகனத்தின் ஓட்டுநருக்கும் காயம் ஏற்பட்டு, அவருக்கு சிகிச்சை அளித்த விவரம் எனக்கு தெரியாது. அவருக்கும் காயம் ஏற்பட்டதால் நான் முந்திக்கொண்டு புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. இருசக்கர வாகனத்தை எவ்வளவு தூரத்தில் இருந்து பார்த்தேன் என்று சொன்னால் நான் சிக்னலை பார்த்து கொண்டிருந்ததால் நான் இருசக்கர வாகனம் வருவதை பார்க்கவில்லை. நான் நின்று கொண்டிருந்து இடத்திற்கு அருகில் சர்வீஸ் சாலை இல்லை. எனக்கு ஏற்பட்ட உடல் ஊபாதைகள் அனைத்தும், விபத்தினால் ஏற்படவில்லை என்றாலும், எனது வயது மூப்பின் காரணமாகத்தான் ஏற்பட்டது என்றால் சரியல்ல. மருத்துவ பில்கள் அனைத்தும் விபத்திற்காக தயாரிக்கப்பட்டவை என்று சொன்னால் சரியல்ல. விபத்து என்னுடைய கவனக்குறைவாலும், அஜாக்கிரதையாலும் ஏற்பட்டுள்ளது, அதனால் 2ம் எதிர்மனுதாரர் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல என்றால் சரியல்ல. நான் பல்வேறு தலைப்புகளில் கோரியுள்ள இழப்பீடு தொகை அதிகம் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை இல்லை.</u>**

**x**

சாட்சி சொல்ல சொல்ல கணிப்பொறியில் பதிவு செய்யப்பட்டு வாசித்துக் காண்பித்து அவர் சரி என்று ஒப்புக்கொண்ட பின்பு அவருடைய கையொப்பம் பெறப்பட்டது.